1973 நவம்பர் 19]

ஆரம்பக் கல்வி இயக்குநர் பதவி

* 152 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பக் கல்வி நிர்வாகத்திற்கென டைரக்டர் ஒருவரை நியமிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ): அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, ஆரம்பக் கல்வி நிர்வாகம் பலவாறாகச் சிதறுண்டிருக்கிறது. ஆகவே, அதை ஒருங்கிணைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பற்றித்தான் அரசு ஆய்ந்து வருகிறது என்று குறிப்பிட்டேன். துவக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் சிலபல சிக்கல்கள் இருக்கின்றன. அவை தனித் தனியாக இயங்க முடியுமா என்று ஆராய வேண்டும். அவற்றைக் கண்காணிப்பதற்கிருக்கிற தன்மைகள், மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி, மாவட்டக் கல்வி அதிகாரி ஆகியவர்களுக்குள்ள பொறுப்புக்கள் எப்படி ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதில் பல சிக்கல்கள் எழுகின்றன. உயர்நிலைப் பள்ளியில் 6-வது முதல் 11-வது வகுப்பு வரையில் வைத்திருக்கிறோம். துவக்கப்பள்ளியில் 1-வது முதல் 5-வது வகுப்பு வரையில் வைத்திருக்கிறோம். இந்த இரண்டையும் இணைத்து வைத்திருக்கிறோம். உயர்நிலைப் பள்ளிகளை ஒருவரிடமும், துவக்கப்பள்ளிகளை மற்றொருவரிடமும் ஒப்படைக்கலாமா என்கிற திட்டத்தைக் கொண்டுவரும்போது 9--10--11 வகுப்புகளை என்ன செய்வது என்ற பிரச்சினை வருகிறது. ஆகவேதான், அரசாங்கம் இதுபற்றி ஆராய்ந்து வருகிறது. ஒரு சுமுகமான தன்மை ஏற்படுமானால் இது பற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும்.

Job Oriental Education System.

* 153 *Q.*—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to change the present Educational system as job oriented; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பள்ளிகளுக்கான திருத்திய பாடத் திட்டத்தை உருவாக்க அரசு அமைத்துள்ள வல்லுநர் குழுக்கள் இதுகுறித்து நாட்டம் செலுத்தி வருகின்றன.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு தேடித் தருகின்ற கல்வி முறையை டில்லி போன்ற பல்கலைக் கழகங்கள் மிகத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகின்றன. அதன் விளைவாக, இந்தியாவில் வேலை வாய்ப்புகள் உருவாகும் நேரத்தில் வட மாநிலத்தில் உள்ளவர்கள் அவற்றை அதிகமான அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளுவார்கள் என்ற அச்சம் தமிழ்நாட்டில் இருந்து வருகிறது. அதைப் போக்குகின்ற வகையில் மிகத் தீவிரமாக இந்தத் திட்டத்தைத் தமிழ்நாட்டிலும் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் இந்தப் பாடத் திட்டங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. கோத்தாரி கமிஷன் எடுத்துக் கூறிய கருத்துக்களை உள்ளடக்கியும், பல்வேறு கல்வி வல்லுநர்கள் எடுத்துக்கூறிய கருத்துக்களை உள்ளடக்கியும், 1 முதல் 5 வகுப்புகள் வரையில் பாடத் திட்டங்கள் ஓரளவுக்குத் திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றன. 6 முதல் 10 வகுப்புகள் வரையிலும் உள்ள பாடத் திட்டங்கள் திருத்தியமைக்கப்படுவதற்குக் குழுக்கள் பரிந்துரைத்திருக்கின்றன. ஏற்கெனவே அறிவியல் பாடத்தை நாம் 6-ஆம் வகுப்பிலிருந்துதான் துவங்கினோம். இப்பொழுது அதை மூன்றாவது வகுப்பிலிருந்து துவங்கலாம் என்றும், புதிய கணக்கியல் பாடத்தை மூன்றாவது வகுப்பிலிருந்து துவங்கலாம் என்றும் புதிய பாடத் திட்டத்தில் சேர்த்திருக்கிறது. 6 முதல் 10 வகுப்புகள் வரையிலும் நாம் மாற்றியமைக்கும் திட்டத்தில், 9--10--11 வகுப்புகளில் கற்றுத்தரப்பட்ட கல்வியைத் தந்து, எதிர்காலத்தில் வேலை வாய்ப்புப் பெறுவதற்கேற்ற வகையில் அமையவேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார்கள். ஆகவே, அதற்கான முயற்சிகள் மேற்கொண்டு, பாடத் திட்டங்களை உருவாக்கி, அத்தகைய கல்வி நடைமுறையில் கொண்டுவரப்படும்.